மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி : ஏற்றுமதி செய்யப்படக் கூடிய பொருள்களின்மீது மாநில அரசுகள் வாங்கும் வரி/விற்பனை வரி விதிப்பதை கடுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்குடன், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினைத் திருத்த, இந்திய அரசின் வணிக அமைச்சகம் கோரியுள்ளதாக இந்தப் பேரவைக்குத் தெரியவருகிறது. மேற்கூறிய கோரிக்கைக்கு இணங்க அரசியலமைப்புச்சட்டம் திருத்தம் செய்யப்பட்டால் மாநில அரசின் வருவாய் அளவும், கூட்டாட்சி நிதியமைப்பின், கீழுள்ள மாநில அரசுகளின் வரி விதிக்கும் அதிகார வரம்பும் பெருமளவிற்குப் பாதிக்கப்படுமாதலால், இது குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த கவலையினைத் தெரிவிப்பதோடு அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தினை மேற்கொள்ள வேண்டாம் என்று இந்திய அரசினை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது. தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

ஈ. சென்னை—பல்கலைக் கழக மதுரை காமராசர் பல்கலைக் கழக திருத்தச் சட்ட முன் வடிவு 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: ''சென்னை பல்கலைக் கழக, மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்ட முன் வடிவு 1979 – (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.''

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சென்னை பல்கலைக் கழக மதுரை—காமராசர் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ''1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/79) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என மொழிகிறேன்.

பொதுக் கல்வி மற்றும் தொழிற்கல்வி போன்று மருத்துவக் கல்வியும் இம்மாநிலத்தில் நீண்டு நிலைத்த பாரம்பரியம் பெற்றிருப்பதால், மருத்துவக் கல்வி இயக்குநரை, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றம், பேரவை மற்றும் கல்விக்குழுவில் துறைச் சார்ந்த

* 1979, ஏப்ரல் 27 ஆம் தேதியிட்ட தமிழ்நா சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

நிரந்தர அங்கத்தினராக நியமிக்கக் கருதி, சென்னை பல்கலைக் கழக சட்டத்தின் பிரிவுகள் 14, 18, 23-க்கும், மதுரை-காமராஜ் பல்கலைக் கழகச் சட்டத்தின் பிரிவுகள் 15, 19, 24-க்கும் திருத்தங்கள் இச்சட்ட முன் வடிவில் இடம் பெற்றுள்ளன.

தவிரவும் மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராயச் செம்மல்களில் பதின்மரை அப்பல்கலைக் கழகத்தின் கல்விக் குழுவின் ஆயுட்கால அங்கத்தினர்களாக நியமிக்க வழிவகை செய்யும் பொருட்டு இப்பல்கலைக் கழகச் சட்டத்தின் விதி 24க்கும் உரிய திருத்தம் இந்த சட்ட முன் வடிவில் சேர்க்கப் பட்டுள்ளன.

மேற்கூறிய சொற்களுடன் நான் இந்த சட்ட முன்வடிவினை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுமாறும் பின் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் சபைக்குப் பரிந்துரைக்கின்றேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பல்கலைக் கழகத்தில் இருக்கக்கூடிய சிண்டிகேட்டிலும், அக்கடமிக் கௌன்சிலிலும் சிலரைப் போடுவதற்கும், அதே போன்று பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைகழகத்திலும் (யூனிவர்சிட்டி ஆப் டெக்னிக்கல் எஜுகேஷன்) மேலும் சில உறுப்பினர்களை போடுவதற்கும் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கும் போது அதற்கான மசோதா வருகின்ற போது, நான் இங்கே ஒரு கருத்தினை எடுத்துக் கூறினேன். மாணவர்களுடைய பிரதிநிதிகள், கல்விக்காக இருக்கக் கூடிய அக்கடமிக் கௌன்சிலில் இடம் பெற வேண்டும் என்று சொன்னேன். அதை ஏற்றுக் கொள்வதற்கு அரசுக்கு என்ன தயக்கம் என்பதை அறிய விரும்புகிறேன். இப்போதும் நான் சொல்ல விரும்புவது என்ன வென்றால், சின்டிக்கேட் உறுப்பினர்கள், அக்கடமிக் கௌன்சில் உறுப்பினர்கள் இவர்களைப் போடுவதில் மாணவர்களின் பிரதிநிதிகளையும் போடுவது சிறப்பாக இருக்கும். அப்போதுதான கல்வியின் தரமும், நன்றாக இருக்கும். நிர்வாகமும் திறமையாக நடைபெறும். அதுதான் என்னுடைய கருத்து.

இப்போது மதுரை பல்கலைக் கழகத்தின் அக்கடமிக் கௌன்சிலில் தமிழ்ப் பேராசிரியர்களை தமிழ் ரிசர்ச் செய்வதற்காக வயது வந்தவர்களை 10 பேர்களை போடப் போகிறார்கள். அவர்கள் ஆயுட்கால உறுப்பினர்களாக இருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருப்பது சரியாக இராது. ஏற்கனவே இப்படிப்பட்ட டிரஸ்டுகளில்கூட ஆயுட்காலம் வரை என்று போடக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். இப்படிப் போடப்படுகின்றவர்களில் சிலர் பத்தாம்பசலிகளாக இருக்கக்கூடும், நவீன உலகத்திற்கு ஏற்ற கருத்துக்கள் இல்லாதவர்களாக இருக்கக்கூடும். விஞ்ஞான ரீதியான கருத்துக்கள் இல்லாதவர்களாக இருக்கக்கூடும், இவர்களை எல்லாம் ஆயுட்காலம் வரை அக்கடமிக் கௌன்சிலில் போடவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பது சரியல்ல. முக்கியமாக கல்விக்கு

என்னென்ன ஸெலபஸ் என்பதையெல்லாம் தயாரிக்கக்கூடிய அக்கடமிக் கௌன்சிலில் மாணவர்களின் பிரதிநிதிகள் இல்லாமல் இருப்பது, அவர்களுக்கு அங்கீகாரம் வழங்காமல் இருப்பது பரிதாபத்திற்குரியதாகும். ஆகவே இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்றுதான் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திலும் அக்கடமிக் கௌன்சிலில் அங்கம் வகிக்கக்கூடிய முறையில், அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் சிண்டிக்கேட்டிலும், செனட்டிலும், அக்கடமிக் கௌன்சிலிலும் அங்கம் வகிக்க வழி செய்து கொடுப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். இது அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையாகும். இதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் ஏன் தயங்குகிறது? அதன் காரணம் என்ன? இந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுடையவும் ஆசிரியர்களுடையவும் பிரதிநிதிகள் பல்கலைக் கழகக்குழுக்களில் இடம் பெற வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பல்கலைக் கழகக் குழுக்களின் சட்டங்களை எல்லாம் முழுவதையும் பரிசீலனை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் அரசுக்கு எண்ணம் இருந்துவருவதால்தான் இப்போது, அதற்கான திருத்தங்கள் இடம் பெறவில்லை. வருகின்ற காலங்களில் எல்லா பல்கலைக்கழகங்களிலும் எந்த அளவுக்கு இடங்கள் அளிக்கப்பட வேண்டும் என்கின்ற நெறி முறைகள் ஆகியவை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படும். மாணவர்களைப் பற்றி குறிப்பிடுகின்ற நேரத்தில், ஒன்றை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மாணவர்களுடைய எண்ணங்கள் அவர்களுடைய நடவடிக்கைகள் கடந்த நான்கைந்து ஆண்டுகளாக எப்படியெல்லாம் இருக்கின்றன என்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில், இதைப்பற்றியெல்லாம் நாம் தீவிரமாக பரிசீலிக்க வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டு வருகிறோம். பல்கலைக் கழகத்தில் உள்ள அக்கடமிக் கௌன்சிலில் சிலரை சேர்த்துக்கொள்வதற்கான திருத்தங்களை நாம் இப்போது கொண்டு வந்திருக்கிறோம். நிர்வாகப் பிரச்னைகள் சம்பந்தமான திருத்தங்கள் எல்லாம் வரும்போது இதைப் பற்றியெல்லாம் யோசிக்கலாம் என்பதைக் கூறிக்கொண்டு இந்த மசோதவை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி--மதுரை-காமராசர் பல்கலைக் கழக ''1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/79) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட-முன்வடிவின் உரிய பகுதி களாக ஆக்கப்பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுத்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்டமுன் வடிவின் உரிய பகுதிகளாக ஆக்கப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே ''1979-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/79) சட்டமாக நிறை வேற்றப்பெறவேண்டும்

என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

[முற்பகல் 11-50]

2, அறிவிப்புகள் (தொடர்ச்சி)

## (உ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பேறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன் வடிவை பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS